வாங்காமல் அவர்கள் புறக்கணிப்பதன் மூலமாக, அவர்களிடத்திலே அந்தப் பண்டங்களை ஏற்பது இல்லை என்று சொல்வதன் மூலமாகத்தான் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, அத்தியாவசியமான உணவுப்பண்டங்களையாகிலும் அரசாங்கம் அக்மார்க் என்ற முறையில் பரிசீலித்து முத்திரையிட்டு நல்ல தரமான உணவுப் பொருள்கள் என்று சான்றிதழ்கள் வழங்குவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதனுல் கலப்படம் குறையும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அக்மார்க் போன்ற சில அடையாளங்களை அரசாங்கம் ஏற்கனவே முறைப்படுத்தியிருக்கிறது. இதைப் பலர் தங்களுடைய பண்டங்களுக்குக் கையாளுகிருர்கள். சில்லரையாக விற்கிற இடத்திலே இந்த அடையாளங்களோடு அவைகளை விற்பது என்பது கடினமான காரியம். இவ்வாறு சில்லரைப் பண்டங்கள் விற்கிற கடையிலே ஒரு குறிப்பிட்ட அளவிலேதான் அடையாளமிட முடியும். ஆகவே அப்படிப் பண்டங்களை விற்பது மிகக் கடினமான காரியம். ஏழைகளாவே அந்தப் பண்டங்களை வாங்க முடியாது. ஆக, எந்தப் பண்டங்களாக இருந்தாலும், கலப்போடு கூடிய பண்டத்தை விற்கக்கூடாது என்பதற்கு அந்தந்த வியாபாரிகள் பெருமளவு பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

Prevention of Environmental Pollution.

* 209 Q.—THIRU S. NARAYANASWAMY (on behalf of Thiru D. V. D' Monte) : Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken by the Government to prevent environmental pollution, particularly air and water, in the interests of public health?

சுற்றுப்புற தூய்மை கெடுவதைத் தடுத்தல்

திரு. எஸ். நாராயணசாமி (திரு. டி. வி. டி'. மாண்டி சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

மக்கள் நல் வாழ்வு நலனையொட்டி, சுற்றுப்புறத்தூய்மை குறிப்பாக காற்று, தண்ணீர் ஆகியவற்றின் தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுற்றுப்புறத் துப்புரவிற்காக, தொழிற்சாலைக் கசிவுகள், தொழிற்சாலை வாயுக்கள், இரசாயனங்கள், பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், மக்களின் கவனக்குறைவு போன்ற காரணங்களால் காற்று, நீர், நிலம் ஆகியவற்றின் தூய்மை கேட்டினுல் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து முறையான ஆய்வை மேற்

கொள்ள தலைமைப் பொறியாளர் ஒருவரின் பதவித் தரத்தில் சுற்றுப்புறச் சுகாதாரச் சிறப்பு அதிகாரி ஒருவரை இந்த அரசு நியமித்துள்ளது.

சென்னை மாநகரிலும், மாநகரைச் சுற்றிலும் காற்றுத் தூய்மைக் கேடு ஆவதைத் தடுப்பதற்கான வழி வகைகளை ஆய்வு செய்து, பரிவுரை செய்ய 1971–ல் அரசு, குழு ஒன்றை அமைத்தது. குழுவின் பரிவுரையை தென்னிந்திய ரயில்வே, சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலை, அரசு போக்குவரத்துத் துறை, இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம், காவல்துறை தொழிற்சாலைகள் தலைமை இன்ஸ்பெக்டர் முதலிய பல்வேறு அதிகாரிகளுக்கு இந்தப் பரிவுரைகள் நிறைவேற்றப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அரசால் அமைக்கப்பட்ட 'நீர்—வடிகாற் தூய்மைப் படுத்தும் குரு' என்ற உயர் அதிகாரக் குழு நீரின் தூய்மைக்கேடு குறித்த பல்வேறு கூறுகள் பற்றி ஆய்வு செய்கிறது. மேலும், இக்குழு, இம் மாநிலத்தில் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு உரிமம் வழங்குவது குறித்து அரசால் கலந்தாலோசிக்கப்பட வேண்டிய ஒரு முகவரைப்பாகவும் செயல்படுகிறது. கள ஆய்வுகளைச் செய்து, கசிவுகளை தூய்மைப்படுத்துவதற்கான முறைகளையும், அவற்றை தீங்கற்றவைகளாக மாற்றுவதற்கான பரிவுரைகளையும் இக் குழுசெய்கிறது. குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவது குறித்து குடும்பநலத்துறை இயக்குநரால கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(பிற்பகல் 3–20)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: லைஞக ஒழுங்காக வரட்டும் என்கிறேன். அதற்குள் என்ன தலை மூழ்கியா போய்விட்டது? இல்லையே. உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி, எம்.எல்.சி., அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.